பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 09 2025 THURSDAY 7.15 PM

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. இந்தியாவில் தயாரித்த பொருட்களை மக்கள் ஆர்வத்துடன் வாங்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சியில் வங்கிகள் உள்ளிட்ட நிதி அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. அமைதியை நிலைநாட்டுவதற்கு உலக நாடுகள் இடையே ராஜீய உறவுகளை வலுப்படுத்த வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

4. ஜார்க்கண்ட் மாநிலத்தில் 10 நக்சலைட்டுகள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் தொடக்கவிழா வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் புதுதில்லியில் சற்றுமுன் தொடங்கியது.

<<<<<<<>>>>>>

இந்தியாவில் தயாரித்த பொருட்களை மக்கள் ஆர்வதுடன் வாங்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் Banswara-வில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், சுயசார்பு இந்தியா இயக்கத்தின்கீழ், நம் நாட்டில் தயாரிக்கும் பொருட்களை பயன்படுத்துவது பெருமைமிக்கது என்று தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் மூலம் அன்றாடம் வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களின் விலை குறைந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மின்துறையின் பங்கு முக்கியமானது என்று கூறிய அவர், சூரிய மின் உற்பத்தியிலிருந்து அணுமின் உற்பத்தி வரையிலான நாட்டின் மின்துறை வளர்ச்சியை எடுத்துரைத்தார்.

பழங்குடியினரின் நலனை உறுதி செய்வதில் மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறிய பிரதமர், இதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் வங்கிகள் உள்ளிட்ட நிதி அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புனேயில் இன்று Bank of Maharashtra-வின் 91-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், வரும் நாட்களில் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முயற்சியில் வங்கிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் உள்ளதாக கூறினார்.

புதுமையான நடைமுறைகளை வங்கிகள் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாடிக்கையாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் எதிர்பார்ப்பை வங்கிகள் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வங்கியில் வாடிக்கையாளர் திட்டங்களும், வரி கட்டமைப்பும் வாடிக்கையாளரை மையப்படுத்தியதாக அமைய வேண்டும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<<>>>>>>

படிமங்கள் அற்ற எரிபொருள் மூலம், மின்உற்பத்தி 50 சதவீதம் என்ற இலக்கை எட்டியுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக ஹைட்ரஜன் இந்தியா மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், ஐந்தாண்டுகளுக்கு முன்னதாகவே இந்தியா இந்த இலக்கை எட்டியதாக பெருமிதம் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, உலகளாவிய தூய்மை எரிசக்தி இயக்கத்தில் இந்தியா தற்போது, முன்னணி நாடாக திகழ்வதாக அமைச்சர் கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் இந்தியா உலக அளவில் நான்காவது இடத்தில் உள்ளதாக கூறிய திரு. பிரல்ஹாத் ஜோஷி, சூரிய மின்சக்தியில் ஜப்பான் நாட்டை பின்தள்ளி, நமது நாடு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்சியில் பேசிய மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி, தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டம் மூலம், வரும் 2030ஆம் ஆண்டுக்குள் வருடந்தோறும் 50 லட்சம் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டம் மூலம், உலக அளவில் இந்தியா பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்யும் முன்னணி நாடாக உருவெடுக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

இந்திய விமானப்படைக்கு 62 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், 97 இலகுரக போர் விமானங்களை வாங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சகம் இந்துஸ்தான் ஏரோநெட்டிக் நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த போர் விமானங்கள் 2027ஆம் ஆண்டு தொடங்கி, ஆறு ஆண்டுகளில் முழுமையாக கொள்முதல் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், ராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்ய 105 இந்திய நிறுவனங்கள் நேரடியாக ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், 11 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நிதியமைச்சகத்தின் புலனாய்வுப் பிரிவும், தொலைத்தொடர்புத்துறையும் தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தில் இன்று கையெழுத்திட்டுள்ளன.

தகவல் தொடர்பில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், இணையதள குற்றங்களையும், நிதி மோசடிகளையும் உடனடியாக கண்டுபிடித்து தடுப்பதற்கு வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

உலகில் நிலவும் புவிஅரசியல் சூழலில் அமைதியை பாதுகாப்பதற்கு ராஜீய உறவுகளை வலுப்படுத்துவது அவசியம் என்று மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இளம் எழுத்தாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாடுகளுக்கு இடையே கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதற்கு இந்த அமைப்பு முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

நாடுகளுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் மக்களிடையேயான கருத்துப் பரிமாற்றம்  முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இளம் எழுத்தாளர்கள், எதிர்கால சந்ததியினரின் எண்ணங்களுக்கு ஊக்க சக்தியாக விளங்குவதாகவும் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 10 நக்சலைட்டுகள் இன்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

மேற்கு Singhbhum மாவட்டம், Chaibasa என்ற இடத்தில் அம்மாநில தலைமை காவல்துறை அதிகாரி திரு. அனுராக் குப்தா முன்னிலையில் இவர்கள் சரணடைந்துள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. அனுராக் குப்தா,இந்த ஆண்டு இறுதிக்குள் நக்ஸல்கள் இல்லாத மாநிலமாக  ஜார்க்கண்ட்டை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

அரசின் சிறப்பு கொள்கை மூலம் நக்சலைட்டுகள் சரணடைந்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தூய்மையே சேவை இயக்கம் கடந்த 17-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

இந்த இயக்கத்தில் பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தூய்மை குறித்து விழிப்புணர்வையும், தூய்மைப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆண்டுக்கு 100 மணிநேரம் தூய்மை இயக்கப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதிமொழியையும் பொதுமக்கள் ஆர்வமுடன் எடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக உலகப்புகழ் பெற்ற வேலூர் கோட்டையை மாணவர்கள், தன்னார்வலர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று தூய்மைப் பணியில் இன்று ஈடுபட்டனர்.

தூய்மைப் பணி தங்களுக்கு மனநிறைவை அளித்துள்ளதாக இதில் பங்கேற்ற மாணவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் ஆர் எஸ் புரா சர்வதேச எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானை சேர்ந்த நபரை எல்லை பாதுகாப்புப்படையினர் இன்று கைது செய்தனர்.

எல்லைப்பகுதியில் ஊடுருவுவதற்கு வழி தேடிக்கொண்டிருந்த இந்த நபரை பாதுகாப்புப்படையினர் கண்காணித்து உடனடியாக கைது செய்ததாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாதம் எட்டாம் தேதி இதேபோன்று பாகிஸ்தானை சேர்ந்த மற்றொரு நபர் Octroi பகுதியில் ஊடுருவ முயன்றபோது கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள், Sahibzada Farhan மற்றும் Haris Rauf மீது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் புகார் அளித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் அளிக்கப்பட்டுள்ள புகாரில் இந்த இரண்டு வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் தேதி இந்தியாவுக்கு எதிரான ஆசிய கோப்பை சூப்பர்-4 சுற்று கிரிக்கெட் போட்டியின் போது, இந்த கிரிக்கெட் வீரர்களின் செயலை கண்டித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இந்த புகாரை அளித்துள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் தொடக்கவிழா வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் சற்றுமுன் புதுதில்லியில் தொடங்கியது.

இப்போட்டிகளில், 104 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்தியாவின் சார்பில் 73 வீரர்கள் இதில் கலந்துகொள்கின்றனர்.

-----------------

இலங்கையில் நடைபெற்றுவரும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

கொழும்புவில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-------------------

வெஸ்ட் இன்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்த அணியில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

துணை கேப்டனாக ரவீந்திர ஜடேஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 2-ஆம் தேதி அகமதாபாதிலும், இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 10-ஆம் தேதி புதுதில்லியிலும் தொடங்குகிறது.

-------------

உலகக்கோப்பை ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் Anushka Thokur தங்கப்பதக்கத்தையும், Anshika வெள்ளிப்பதக்கத்தையும், Aadhya Agarwal வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Deependra Singh Shekhawat - வெள்ளிப்பதக்கத்தையும், Rohit Kanyan வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-----------

தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்றுவரும் உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ராகேஷ் குமார், டோமன் குமார் மற்றும் சீத்தல் தேவி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

--------------

சீனா Smash டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Diya Chitale வெற்றிபெற்றார்.

<<<<<<<END>>>>>>